## திராவிட மாடல் அரசின் சாதனைகளுக்கு அமெரிக்காவின் 'நியூயார்க் டைம்ஸ்' ஏடு புகழாரம்!

# தூய்மையான எரிசக்தித் துறையில் புதிய அத்தியாயம்! பெண்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தும் அரசு!

## அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அறிக்கை!

**சென்னை, மே 10 -**

**இந்திய மாநிலங்களிலேயே பொருளாதாரத்தில் முதன்மை இடம் பிடித்திருக்கும் தமிழ்நாட்டில் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசினால் ஏற்பட்டுள்ள தூய்மை எரிசக்தி துறை புரட்சியால் பெண்களின் வாழ்வில் முன்னேற்றகரமான மாற்றங்கள் ஏற்பட்டு இருப்பதை சர்வதேச அளவில் புகழ்பெற்ற நியூயார்க் டைம்ஸ் விரிவாக பதிவிட்டு, பாராட்டியிருப்பதை சுட்டிக்காட்டியுள்ள தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா இந்த சாதனைகள் அனைத்திற்கும் திராவிட நாயகன் முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலே காரணம் என தெரிவித்துள்ளார்.**

அவருடைய அறிக்கை வருமாறு:

அமெரிக்காவிலிருந்து வெளியாகும் நியூயார்க் டைம்ஸ் இதழில் தமிழ்நாட்டின் தூய்மை எரிசக்தி புரட்சி குறித்தும் அது ஏற்படுத்தி உள்ள மறுமலர்ச்சி குறித்தும் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது.

**சூரிய ஒளி தகடு உற்பத்தியாளர்கள்!**

தென்னிந்திய மாநிலமான தமிழ்நாடு, தூய்மையான எரிசக்தித் துறை உட்பட புதிய தொழிற்சாலைகளை ஈர்ப்பதில் மிகவும் தீவிரமாக செயல்பட்டு வருகிறது. ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்கு முன்பு காற்றாலை இறக்கை உற்பத்தியாளர்கள் இங்கு வந்தனர். அவர்களைத் தொடர்ந்து சூரிய ஒளி தகடு உற்பத்தியாளர்கள் மற்றும் மின்சார வாகன நிறுவனங்களும் வந்தன.

தமிழ்நாடு உடனடியாக நிலத்தையும், அரசாங்க மானியங்களையும் வழங்கியது. தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் வீட்டு வசதி போன்ற உதவிகளையும் மாநில அரசு அளித்தது.

நீண்ட காலமாக பெண்கள் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து வரும் தமிழ்நாடு, கல்லூரிப் பட்டம் பெற்ற பெண் தொழிலாளர்களின் ஒரு பெரிய படையை தூய்மை யான எரிசக்தி துறைக்கு வழங்கியது.

26 வயதான கே.அமலா இந்தியாவின் தென்கோடியான திருநெல்வேலியின் புறநகரில் உள்ள டாடா பவர் சூரிய ஒளி தகடு தொழிற்சாலையில் தனது கனவுகளை நோக்கி வந்தார்.

**தொழிற்சாலையில் பணிபுரியும் பெண்கள்!**

அவரைப் போன்ற சுமார் 2,000 பெண்கள் இந்த தொழிற்சாலையில் இரவு பகலாக இயந்திரங்களை இயக்குகிறார்கள். ஒவ்வொருநாளும், விடியற்காலையில் தொடங்கி, அவர்கள் பேருந்துகளில் வந்து செல்கிறார்கள். அடர் நீல நிற சீருடைகள், தோள்பைகள், சாதாரண செருப்புகள் அணிந்து வரும் அவர்கள், தொழிற்சாலைக்குள் நுழையும் போது பாதுகாப்பு காலணிகளை அணிந்து கொள்கிறார்கள். தொழிற்சாலை தளம் பெரும்பாலும் தானியங்கிமயமாக்கப்பட்டுள்ளது. ரோபோ கைகள் சரியாக வேலை செய்கிறதா என்பதை உறுதிப்படுத்தவும், ஒரு இணைப்புப் பெட்டியை பற்றவைக்கவும் அல்லது விரிசல்களுக்கு இடையில் விழுந்த உடைந்த வேஃபர் துண்டுகளை எடுக்கவும் மனிதத் தொழிலாளர்கள் அங்கு இருக்கிறார்கள்.



அண்மையில் ஒரு புதன் கிழமை காலை 7 மணிக்கே சூரியன் பிரகாசமாகவும் வெப்பமாகவும் இருந்தது. அமலா தனது இரவு நேர பணி முடிந்ததும் நிறுவன பேருந்தில் ஏறினார். பேருந்து வாகன நிறுத்து மிடத்தை விட்டு வெளியேறி, வாழைத் தோட்டங்களைக் கடந்து, ஒலி எழுப்பும் கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் கூட்ட நெரிசலில் ஊடுருவிச் சென்றது. சில பெண்கள் தூங்கிப் போனார்கள். சிலர் தங்கள் தொலைபேசிகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அமலா ஜன்னலுக்கு அருகில் சாய்ந்தார். அவருக்கு, இந்த வேலை ஓரளவுக்கு தவிர்க்க முடியாத ஏற்பாடு செய்யப்பட்ட திருமணத்தை தள்ளிப் போடுவதற்கான ஒரு வழியாக இருந்தது. "நான் வீட்டில் இருந்திருந்தால், இந்நேரம் எனக்கு திருமணம் ஆகியிருக்கும்," என்று அவர் கூறினார்.

வேலை நேரங்களுக்கு இடையில், அவர் இயற்பியல் பேராசிரியராக ஆவதற்கான தேர்வுக்கு தயாராகிக் கொண்டிருந்தார்.

அவருக்கு முன்னால் அமர்ந்திருந்த 26 வயதான ஏ.ஆர்.வர்ஷா, இந்த வேலையைச் செய்ய தனது தாயை சம்மதிக்க வைக்க வேண்டியிருந்தது.

வர்ஷா வீட்டிலிருந்து இரண்டு மணி நேரம் தொலைவில் உள்ள தொழிலாளர் விடுதியில் தங்குவது குறித்து அவரது தாய் கவலைப்பட்டார். அதனால் வர்ஷா தனது தாயை அங்கு அழைத்துச் சென்று மற்ற தொழிலாளர்களை அறிமுகப்படுத்தினார். "இது என் வாழ்க்கைக்கும் என் தொழில் வாழ்க்கைக்குமான ஒரு வாய்ப்பு என்று நான் விளக்கினேன்," என்று வர்ஷா கூறினார்.

இந்த வேலை ஒவ்வொரு பெண் தொழிலாளிக்கும் வெவ்வேறு காரணங்களை கொண்டிருந்தது. சிலர் தங்கள் திருமணத்திற்காக தங்க நகைகள் வாங்க சேமிப்பதாகக் கூறினர். மற்றவர்கள் முதுகலைப் படிப்பு படிக்க சேமிப்பதாகக் கூறினர். சிலர் தங்கள் மருமகள்களுக்கும் மருமகன்களுக்கும் பரிசுகள் வாங்க முடிவதையோ அல்லது தங்களுக்குப் பிடித்தபோது ஒரு ஐஸ்கிரீம் வாங்க முடிவதையோ விரும்புவதாகக் கூறினர்.

வர்ஷாவும் அமலாவும் பேருந்திலிருந்து இறங்கி, தங்கள் தங்கும் விடுதிக்குச் செல்லும் குறுகிய பாதையில் நடந்தனர். அவர்கள் இருவரும் தங்கள் பெற்றோரின் காலத்தில் அறியப்படாத ஒரு எரிசக்தித் துறையின் தொழிலாளர்கள்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் கூற்று ப்படி, ஒவ்வொரு ஆண்டும் அவர்களைப் போன்ற குறைந்தது ஏழு மில்லியன் இளம் இந்தியர்கள் தொழிலாளர் சந்தையில் நுழைகிறார்கள். இந்தியாவின் தூய்மையான எரிசக்தி வணிகத்தை விரிவுபடுத்துவதற்கான முயற்சிகள், ஒரு புதிய தலைமுறை இந்தியர்கள் எதிர்பார்க்கும் திறமையான வேலைகளை வழங்குவதற்கான நாட்டின் முயற்சிகளின் ஒரு முக்கிய சோதனையாகும்.

திருநெல்வேலியில் அவர்கள் தயாரிக்கும் சூரிய ஒளி தகடுகள், நாட்டின் மறுபுறம், வடமேற்கு ராஜஸ்தானின் பாலைவனத்தில் உள்ள டாடா பவரின் நான்கு ஜிகாவாட் சூரிய ஒளி பண்ணைக்கு அனுப்பப்படுகின்றன. அதற்கான வேஃபர்கள் இன்னும் சீனாவிலிருந்து வருகின்றன. அதே போல், அவை பொருத்தப்படும் பல கண்ணாடி பேனல்களும் அங்கிருந்துதான் வருகின்றன.

கொரோனா வைரஸ் தொற்றுநோயின் போது சீன சப்ளையர்களை நம்பியிருப்பதன் அபாயங்கள் தெளிவாகத் தெரிந்தன என்று டாடா பவரின் தலைமை நிர்வாக அதிகாரி பிரவீர் சின்ஹா நினைவு கூர்ந்தார். ஏற்றுமதிகள் தடைபட்டன. எதிர்பாராத விலை ஏற்ற இறக்கங்கள் இருந்தன.

"இரண்டு அல்லது மூன்று நாடுகளுக்கு பாதிக்கப்படாத ஒரு விநியோகச் சங்கிலி இருப்பது மிகவும் முக்கியம்," என்று அவர் கூறினார்.

அப்போது, அமெரிக்க ஜனாதிபதி பிடனின் பதவிக்காலத்தில், அமெரிக்கா இதை ஒப்புக்கொண்டது. அமெரிக்க அரசாங்க கடன் வழங்கும் நிறுவனமான யு.எஸ். இன்டர்நேஷனல் டெவலப்மென்ட் ஃபை னான்ஸ் கார்ப்பரேஷன், உலகளாவிய விநியோகச் சங்கிலிகளை பல்வகைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு டாடா திட்டத்திற்கு $425 மில்லியன் கடனுதவி அளித்தது.

**சென்னையில் சூரிய ஒளி மின்னாற்றல்!**

அமெரிக்க நிறுவனமான ஃபர்ஸ்ட் சோலார், அமெரிக்க அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மாநில தலைநகரான சென்னைக்கு அருகே தனது ஆலையை அமைத்தது. சென்னையில் சூரிய ஒளி மின்னாற்றல் தொகுதிகளை தயாரிக்கும் விக்ரம் சோலார், ஒரு ஜிகாவாட் பேட்டரி சேமிப்பு வசதியை அமைக்கவுள்ளது.

தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியில் உள்ள ஒரு தொழிற்பூங்காவில், இந்திய மின்சார ஸ்கூட்டர் நிறுவனமான ஓலா, தனது சொந்த பேட்டரி செல்களை உற்பத்தி செய்ய தயாராகி வருகிறது.

தூய்மையான எரிசக்தி துறையில் தமிழ்நாடு மிக வேகமாக முன்னேறி வருவதுடன் அது தமிழ்நாட்டுப் பெண்கள் வாழ்வில் பெரும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தி வருகிறது.

என நியூயார்க் டைம்ஸ் விரிவாக பதிவு செய்து பாராட்டி உள்ளது. தொழில்துறையில் கடந்த நான்காண்டுகளில் தமிழ்நாடு மிகப்பெரும் பாய்ச்சல் நடத்தி இருப்பதற்கும் அதன் மூலமாக வேலை வாய்ப்புகள், குறிப்பாக பெண்களுக்கான வேலை வாய்ப்புகள் பெருகி இருப்பதற்கும் காரணம் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்தான்.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### கோவை தெற்கு மாவட்டத்திற்கு உட்பட

# 21 இடங்களில் சாதனை விளக்கப் பொதுக் கூட்டங்கள்!

### மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

*கோவை, மே 10-*

கோவை தெற்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் 05.05.2025 திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில் சூலூரில் அமைந்துள்ள கோவை தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் மயூரா சுப்பிரமணியம் தலைமையில், மாவட்ட துணைச் செயலாளர் ப.க.சாமிநாதன் வரவேற்புரையில் நடைபெற்ற கூட்டத்தில் கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் கழக தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் டாக்டர் மகேந்திரன், கழக சட்டதிட்ட திருத்தக்குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ், கழக அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணைச் செயலாளர் பனப்பட்டி தினகரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இருகூர் சந்திரன், ஏர் போர்ட் ராஜேந்திரன், மு.க.முத்து, அமுதபாரதி உள்பட பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தின் இறுதியில் மதுக்கரை ஒன்றியச் செயலாளர் விஜயசேகரன் நன்றியுரையாற்றினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :

"நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு" சாதனை விளக்க பொதுக் கூட்டங்கள்!

நடைபெற்று முடிந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உள்துறை மானிய கோரிக்கை மீதான பதிலில் தெரிவித்தபடி, வளர்ச்சி சார்ந்த எந்த ஓர் இலக்காக இருந்தாலும் அதில் இந்திய ஒன்றியத்தின் சராசரியை விட தமிழ்நாடு கூடுதலான அளவில் முன்னேறி யிருக்கிறது. மக்கள் முன்னேறும் முத்திரை திட்டங்களான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், மகளிர் விடியல் பயணத்திட்டம், முதலமைச்சரின் காலை உணவு திட்டம், புதுமைப்பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம், அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், இல்லம் தேடி கல்வி, மக்களை தேடி மருத்துவம் என அனைத்து திட்டங்களும் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கும், தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கும் முன்னோடியாக திகழ்வதை மற்ற மாநிலங்கள் கூட இன்று திரும்பிப் பார்க்கின்றன. திராவிட முன்னேற்றக் கழக அரசின் இந்த சாதனையை கோவை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி கழகங்கள் என 21 இடங்களில் சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள் மிகச் சிறப்பாக நடத்திடுவதென இக்கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப்படுகிறது.

வரலாற்று சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கையை ரூவில் தொடங்கி எந்நாளும் தமிழ்நாட்டு மக்கள் நலனுக்கு ஓய்வில்லாமல் உழைத்து வரும் திராவிட பேரரசர், மாநில சுயாட்சி நாயகர், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் 200க்கும் மேற்பட்ட இடங்களில் வரலாறு காணாத பெரும் வெற்றி பெற்று 7 வது முறையும் இந்த ஆட்சி தொடரவும், கோவை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட 4 சட்டமன்ற தொகுதிகளிலும் வெற்றி பெற கடுமையாக உழைப்பது எனவும் இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

கூட்டாட்சி தத்துவத்தினை வலுப்படுத்துவதற்கான தேசிய முகம் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர்!

ஒன்றிய அரசு மாநிலங்களின் உரிமைகளையும், அதிகாரத்தையும் பறித்து வரும் நிலையில், ஒன்றிய அரசின் அதிகாரமயமாக்கலை எதிர்த்து மற்ற மாநில தலைவர்களையும் ஒருங்கிணைத்து தேசிய முகமாக உருவெடுத்திருக்கிறார். நீட் முதல் விவசாய சட்டங்கள் வரை, மொழியுணர்வு முதல் சட்ட அமலாக்கம் வரை பாஜகவின் அதிகாரமயமாக்கலை எதிர்த்து தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்! என்றும் முழங்கி இன்று 100 நாள் வேலைத் திட்டத்தில் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சம்மள நிலுவைத் தொகையை விடுவித்தும், சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தவும் ஒப்புதல் வழங்கியுள்ளது ஒன்றிய அரசு. கழக அரசின் நிதிநிலை அறிக்கை மற்றும் மானிய கோரிக்கையில் செயற்கரிய செயலை முன்னெடுத்து உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு பிரதிநிதித்துவம், தமிழ்நாடு விண்வெளி தொழில் கொள்கை 2025, பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள் விழா தமிழ் வார விழாவாக கொண்டாடப்படுவது, கும்ப கோணத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் பல்கலைக்கழகம், எல்லோரும் சமம், எல்லாருக்கும் எல்லாம் என்ற சொற்களை நடைமுறைப்படுத்தும் வகையில் காலனி எனும் பெயர் நீக்கம் போன்ற முன்னோடி திட்டங்களைத் தந்த திராவிட நாயகருக்கு நன்றி தெரிவித்து இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

ஜூன் 1ஆம் தேதி மதுரை கூடல் நகரில் நடைபெற உள்ள கழகப் பொதுக் குழு கூட்டத்தில் கோவை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து பொதுக் குழு உறுப்பினர்களும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிப்பது என இக்கூட்டத்தில் வாயிலாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

கோவை, திருப்பூர் மாவட்ட விசைத்தறி உரிமையாளர்கள் மற்றும் ஜவுளி உற்பத்தியாளர்கள் இடையேயான நீண்ட நாள் கூலி உயர்வு பிரச்சினையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ சாமிநாதன், மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, மனித வள மேலாண்மை துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டு இருதரப்பிற்கு இடையேயான பேச்சு வார்த்தையில் உடன்பாடு ஏற்படுத்தினர் அதற்கு நன்றி தெரிவித்து இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

அமலாக்கத்துறை போன்ற அமைப்புகளை அரசியல் பழிவாங்கலுக்குப் பயன்படுத்தும் ஒன்றிய பாஜக அரசின் அதிகார மீறலுக்கு கண்டனம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

கோவை, திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட சூலூர், பல்லடம், திருப்பூர் ஆகிய பகுதிகளில் செமி கண்டக்டர் தொழிற் பூங்கா அமைக்க அறிவிப்பு வெளியிட்டு தமிழ்நாட்டை "செமி கண்டக்டர் ஹப்" ஆக மாற்றும் தமிழ்நாடு முதலமைச்சர், திராவிட நாயகர், கழக தலைவர் அவர்களுக்கும், கோவை மாநகராட்சியில் ரூ 9.67 கோடி மதிப்பீட்டில் 7 ஏக்கர் பரப்பளவில் சர்வதேச தரத்திலான ஹாக்கி மைதானம் அமைப்பதற்கு ஆணையிட்டும், அடிக்கல் நாட்ட கோவை வருகை தந்து கோவை மாவட்ட வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் கழகத்தின் எதிர்காலம், இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

---

# நாடு போற்றும் நான்காண்டு - தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

### தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆ. மணி எம்.பி. சிறப்புரை!

*தருமபுரி, மே 10-*

தருமபுரி கிழக்கு மாவட்டம் நல்லம்பள்ளி கிழக்கு ஒன்றியம், நல்லம்பள்ளி பேருந்து நிலையம் அருகில் நல்லம்பள்ளி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.எஸ்.சண்முகம் தலைமையில் மாவட்ட துணை செயலாளர் ஆர்.ஆறுமுகம் வரவேற்புரையில் தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி திராவிட மாடல் அரசின் நாடு போற்றும் நான்கு ஆண்டு சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார்.

உடன் முன்னாள் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ. சுப்ரமணி, மாநில சட்ட திருத்த குழு இணை செயலாளர் இரா.தாமரைச்செல்வன், தலைமைக் கழக பேச்சாளர்கள் சேலம் சுஜாதா, காவேரிப்பட்டினம் இளையராஜா ஆகியோர் கழக ஆட்சியின் சாதனைகளை எடுத்துரைத்து உரையாற்றினர்.

கூட்டத்தில் நகர கழக செயலாளர் நாட்டான் மாது, தர்மபுரி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் டி.எல்.காவேரி,


பொதுக்குழு உறுப்பினர் நட்ராஜ், அணிகளின் அமைப்பாளர்கள் மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் என்.பி.பெரியண்ணன், வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் சிவன், மகளிர் அணி மாவட்ட அமைப்பாளர் முத்து லட்சுமி, ஒன்றிய நிர்வாகிகள் வே.வீரமணி, ரங்கநாதன், ஆனந்தன், புனிதம் பழனிசாமி, சந்திரன், மகேஷ் குமார், மோகன், சின்னப்பெருமாள், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் என்.எஸ் கலைச்செல்வன், ஆர்.பி முத்தமிழன், கலை இலக்கிய அணி துணை அமைப்பாளர் வெங்கட்ராமன் மற்றும் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், BLA2, BlC நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் திரளாக கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா வெ.மணிமொழி

### மே 10 (1993)



**கிராம தபால் நிலையத்தில் பணிபுரிந்த இவர், கழகக் கொள்கைமீது கொண்ட பற்றின் காரணமாக, தனது பணியை துறந்து, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**கழகத்தின் துவக்க காலத்தில் ஆலங்குடி பகுதியில் வட்டக் கழக பிரதிநிதியாக பொறுப்பு வகித்து கழக பணியாற்றியவர்.**

**ஊராட்சி மன்ற தலைவர், தொடக்க கூட்டுறவு வங்கி தலைவர், புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர், கூட்டுறவு ஒன்றிய பெருந்தலைவர் போன்ற பதவி வகித்தவர்.**

**நெருக்கடி கால மிசா சட்டத்தில் கைது செய்ப்பட்டு சிறை சென்றதோடு, தலைமைக் கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**